# THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No. 98/2015** **PW.8**
Miscellaneous :
Preliminary Register :
STATEMENT OF WITNESS
Name : திருமதி. சூசையம்மாள் கிருபா
Husband Name : திரு. விஜிந்த்
Village : திருக்குறுங்குடி
Taluk : நான்குநேரி
Employment : உதவி ஆய்வாளர்
Age : 28 Date: 20.05.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent. Petition filed and allowed. )**

__முதல் விசாரணை__ :–

1. நான் தற்போது திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முக்கிய சாட்சிகள் தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் நீதிமன்ற அனுமதி பெற்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம அளிக்கிறேன். கடந்த 16.11.2013 அன்று 19.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.மனோஜ்குமார் அவர்கள் பதிவு செய்த நிலைய குற்ற எண் 161/2013 இ.த.ச பிரிவுகள் 420, 294 பி, 506(1) படி வழக்கை முதல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.கனகராஜ் அவர்கள் சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைப்பாண்டி,பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட திருமதி நாககுமாரி, காவல் ஆய்வாளர்

அவர்கள் பட்டியல் சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை கூறியதான் தனியாக பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கை 19.01.2015 அன்று மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ஜவகர் பட்டியல் சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை கூறியதான் தனியாக பதிவு செய்யவில்லை. வழக்கின் எதிரி முன் பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை இல்லை.

3. சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் அவரது புலன் விசாரணையில் இருந்தும் எதிரி மீது குற்றம் உறுதியானதால் இ.த.ச பிரிவு 420, 294 பி, 506(1) பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **( பார்வை மகசர் அ.சா.ஆ.17, மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.18, ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4. இவ்வழக்கில் கூறியுள்ள நாள் மற்றும் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.05.20 20:02:51 +0530

Judicial Magistrate,
Valliyoor.